ஆடி பரணியை முன்னிட்டு

ரத்தினகிரி பாலமுருகன் கோயிலில் தெப்பல் உற்சவம்

திரளான பக்தர்கள் தரிசனம்

▶ ரத்தினகிரி பாலமுருகன் கோயிலில் நேற்று ஆடி பரணியை முன்னிட்டு தெப்பல் உற்சவம் நடைபெற்றது. உள்படம்: சுவாமி பாலமுருகனுக்கு, பாலமுருகனடிமை சுவாமிகளால் தீபாராதனை காட்டப்பட்டது.

ஆற்காடு, ஆக.9: ரத்தினகிரி பாலமுருகன் கோயிலில் நேற்று ஆடி பரணி முன்னிட்டு புதியதாக அமைக்கப்பட்ட அறுகோண தெப்பக்குளத்தில் நடந்த தெப்பல் உற்சவத்தில் சுவாமி பாலமுருகன் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

ஆற்காடு அடுத்த ரத்தினகிரியில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் ஏழாம் படை வீடு என்று பக்தர்களால் போற்றப்படும் பிரசித்தி பெற்ற பாலமுருகன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் நேற்று ஆடி பரணி விழா வெகு விமரிசையாக நடந்தது.

தொடர்ந்து இரவு ஷண்முக புஷ்கரணி தடாகத்தில் தெப்பல் உற்சவம் நடந்தது. அதனை முன்னிட்டு சுவாமி பால முருகனுக்கு சிறப்பு அலங்காரம், சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.

தொடர்ந்து ரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள் தலைமையில் கலவை சச்சிதானந்த சுவாமிகள் உள்ளிட்ட பலர் முன்னிலையில் மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக சென்று புதியதாக அமைக்கப்பட்ட அறுகோண தெப்பக்குளத்தில் அலங்கரிக்கப்பட்ட புஷ்ப பல்லக்கில் எழுந்தருளி குளத்தை 3 முறை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு கற்பூரம் ஏற்றி சுவாமி தரிசனம் செய்தனர். இன்றும் ஆடி கிருத்திகை முன்னிட்டு இரவு 7 மணிக்கு தெப்பல் உற்சவம் நடைபெறுகிறது.

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய முருகன்

சென்னை பாஸ்போர்ட் அலுவலகம் வர பாதுகாப்பு கோரி மனு

சென்னை, ஆக. 9: முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய முருகன் பாஸ்போர்ட் கேட்டு விண்ணப்பிப்பதற்காக, திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னை சென்றுவர காவல்துறை பாதுகாப்பு வழங்க உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முருகன் சார்பில் அவரது மனைவி நளினி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், சர்வதேச பாஸ்போர்ட்டை பெற சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு செல்வதற்காக சிறப்பு முகாமில் இருந்து வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும். அங்கு சென்று வர எனக்கு காவல் துறை பாதுகாப்பு வழங்க தமிழ்நாடு அரசுக்கும், வெளிநாட்டினர் பதிவு மண்டல அலுவலருக்கும் உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எம்.சுந்தர் மற்றும் ஆர்.சக்திவேல் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த வழக்கை இந்த அமர்வு விசாரிக்க வேண்டுமா அல்லது தனி நீதிபதி விசாரிக்க வேண்டுமா என தலைமை நீதிபதியின் உத்தரவை பெறும்படி, நீதிமன்ற பதிவுத்துறைக்கு உத்தரவிட்டனர்.

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை

கலைஞர் 100 1924 - 2023

திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண். 27/2023–24/ தவஅ/ நாள்:04.08.2023.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 திருப்பத்தூர் (நெ), க(ம)ப, கோட்டத்தை சார்ந்த திருப்பத்தூர் (நெ), க(ம)ப, உட்கோட்டத்தைச் சார்ந்த அரசசாலைகளை உறுதிப்படுத்துதல், ஓடுதளத்தை மேம்பாடு செய்தல், சிறுபாலங்கள் திரும்பக்கட்டுதல் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிகள் உட்பட – **TVM-108** பணிக்கு **இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 28.08.2023 அன்று 12.00மணி** வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **11.08.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./4350/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப்பொறியாளர்(நெ), க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை

கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இணையதள வழியில் மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 03/2023-24 / முவஅ / நாள்: 02.08.2023.

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர் அவர்களால் திருச்சி (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான கீழ்கண்ட பணிக்கு இணையதள வழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) **13.09.2023, 15.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

இரயில்வே திட்டப்பணி 2009-10- "திருச்சி இரயில்வே சந்திப்பு அருகில் எம்.எஸ்.பி கேம்ப் சாலையில் கிமீ 0/2ல் உள்ள குறுகலான இரயில்வே பாலம் எண் 1136க்கு பதிலாக இரயில்வே கிமீ 340/4-5 ல் திருச்சிராப்பள்ளி சந்திப்பு மற்றும் பூங்குடி இரயில் நிலையங்களுக்கு இடையில் சாலை மேம்பாலம் கட்டும் பணியில் 2-ஆம் கட்ட பணிகள்"

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை http://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **11.08.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.

செமதொஇ/4340/ஒப்பந்தப்புள்ளி/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

கந்திலி அருகே பள்ளியில் கலைஞர் நினைவஞ்சலி நிகழ்ச்சி

தமிழகத்தின் தலை எழுத்தை மாற்றாமல் எங்கு சென்றாய் தலைவா?

2ம் வகுப்பு மாணவனின் மழலை பேச்சு வைரல்

▶ கந்திலி அருகே பள்ளியில் நடந்த கலைஞர் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் மழலை பேச்சில் அசத்திய 2ம் வகுப்பு மாணவன் யோகேஷ்.

திருப்பத்தூர், ஆக. 9: கந்திலி அருகே பள்ளியில் நடந்த கலைஞர் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் தமிழகத்தின் தலை எழுத்தை மாற்றாமல் எங்கு சென்றாய் தலைவா? என்ற 2ம் வகுப்பு மாணவனின் தலாட்டு மழலை பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாகி, பொதுமக்கள் மத்தியில் பாராட்டு பெற்றுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அடுத்த ராஜாவூர் தொடக்கப்பள்ளியில் 30க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இந்த பள்ளியின் தலைமை ஆசிரியை இந்திரா, மாணவ, மாணவிகளை ஊக்குவித்து கல்வி கற்று தருகிறார். இதனால் இப்பள்ளி மாணவர்கள் தனித்திறமைகளில் சிறந்து விளங்குகின்றனர். இந்நிலையில் முத்தமிழறிஞர் கலைஞரின் 5ம்ஆண்டு நினைவு அஞ்சலி தமிழ்நாடு முழுவதும் நேற்று அனுசரிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து ராஜாவூர் தொடக்கப்பள்ளியில் 2ம் வகுப்பு மாணவன் யோகேஷ் தனது மழலை குரலில் முத்தமிழ் அறிஞர் கலைஞரை பற்றி தாலாட்டு பாடி அசத்தியுள்ளார். மாணவனின் பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அந்த வீடியோ பதிவில்: முத்தமிழ் கலைஞருக்கு தலாட்டு என்று தொடங்கி என் உயரினும் மேலான உடன் பிறப்புக்களே என்று கூறும் என் தாத்தாவின் குரலை எப்படி கேட்பேன். ஐயா! உன் சாதனைகளை எவ்வாறு கூறுவேன். தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா என்ற வார்த்தைக்கு மாறாக, கலைஞர் என்று சொல்லடா, தலைநிமிர்த்து நில்லடா என்று கூறும் அளவிற்கு நீ தமிழை வளர்த்தாய். உன் தமிழை நான் இனி என்று கேட்பேன்.

தலைமுறை போற்றும் தலைமகனே, தமிழை நேசித்து, தமிழை சுவாசித்து தமிழோடு கலந்த காவியமே, வரலாறு மறக்காத ஓவியமே, போர்குணத்தின் போர்முரசு, ஏழைகளின் நாயகனே, தட்சிணாமூர்த்தி என்ற பெயரை கருணாநிதி என்று மாற்றிக் கொண்டாய், தமிழகத்தின் தலை எழுத்தை மாற்றாமல் எங்கு சென்றாய் தலைவா? காதை வைத்து கேள் கடிகார ஓசை கேட்கும், நெஞ்சில் மனதை வைத்து பார் பகுத்தறிவு ஓசை கேட்கும் என்று மெரினாவுக்கு சென்றாயோ, தமிழ்தாய் தந்தவனே, செம் மொழியை காத்தவரே, தமிழை வாழ்க வளர்த்து, தமிழென்னும் கடலில் நனைய வைத்தாய். சிம்மக்குரலான, என் உயிரினும் மேலான, உடன்பிறப்புகளே என்ற என் தலைவரின் குரலை எப்படி கேட்பேன். வாழ்க உன் புகழ், வாழ்க உன் தமிழ்தொண்டு, கலைஞர் தாத்தா, வாழ்க, கலைஞர் தாத்தா வாழ்க என்ற சிறுவனின் பேச்சு சமூக வலைதளங்களில் பரவி, பலரும் பாராட்டி வருகின்றனர்.

CHENNAI METRO RAIL LIMITED
(A Joint Venture of Govt. of India & Govt. of Tamil Nadu)
METROS, Anna Salai, Nandanam, Chennai - 600 035

E-Tender Notice
e-Procurement Tender
National Competitive Bidding
E-Tender No: CMRL/Phase-II/ Rupee Term Loan /2023

Chennai Metro Rail Limited (CMRL) invites online tenders through e-procurement portal from Sound, Reputed and Experienced Banks and/or Non-Banking Financial Institutions through National Competitive Bidding (NCB) under Single Stage Two Envelope system cum E-Reverse Auction (i.e. Technical & Financial) with initial filter criterial from eligible applicants, who fulfil qualification criteria as stipulated in Evaluation and Qualification criteria in tender document, for the below service:

Tender No. CMRL/Phase-II/Rupee Term Loan/2023: "Selection of Lender for INR 150 Crore Rupee Term Loan towards Chennai Metro Rail Project Phase-II work".

For further details, please visit:

For NIT : **https://chennaimetrorail.org**

For Downloading Bid Documents : **https://eprocure.gov.in/eprocure/app**

Sd/-
Director (Finance)

DIPR/4374/Tender/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வேலூர் தலைமை தபால் நிலையத்தில் தொடக்கம்

205 நாடுகளுக்கு குறைந்த விலையில் பார்சல் அனுப்ப ஏற்றுமதி மையம்

▶ வேலூர் தலைமை தபால் நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ள அஞ்சலக ஏற்றுமதி மையம்.

வேலூர், ஆக 9: வேலூர் தலைமை தபால் நிலையத்தில் இருந்து 205 நாடுகளுக்கு குறைந்த விலையில் பார்சல் அனுப்ப ஏற்றுமதி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் தபால்துறை மூலம் தபால் சேவை, விரைவு தபால் சேவை, ஆதார் தொடர்பான திருத்தங்கள், சேமிப்பு கணக்கு, காப்பீடு திட்டம், ஆண், பெண் குழந்தைகளுக்கான திட்டங்கள் என்று பல்வேறு திட்டங்கள் கிராமங்கள் தொடங்கி நகரங்கள் வரையில் உள்ளது.

இந்நிலையில், தபால்துறையில் அடுத்த மைல்கல்லாக அஞ்சலக ஏற்றுமதி மையம் புதிய சேவையாக தொடங்கப்பட்டுள்ளது. இந்த அஞ்சலக ஏற்றுமதி மையம் வேலூர் தலைமை தபால்நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த சேவை மூலம் சிறு வியாபாரிகள் வணிகரீதியிலான 2 கிலோ எடையுள்ள பொருட்களை உலகில் உள்ள நாடுகளுக்கு அனுப்பி வைக்கலாம். அமெரிக்கா, ஜப்பான் உட்பட 205 நாடுகளுக்கு இந்த சேவை மையம் மூலம் பார்சல் அனுப்ப முடியும். இந்த சேவையை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தபால் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து வேலூர் தபால் கோட்ட கண்காணிப்பாளர் ராஜகோபாலன் கூறுகையில், 'வேலூர் தலைமை தபால் நிலையத்தில் அஞ்சலக ஏற்றுமதி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், முதன்முறையாக அமெரிக்காவுக்கு சில நாட்களுக்கு முன்பு பார்சல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உலகில் உள்ள 205 நாடுகளுக்கு இங்கிருந்து பார்சல் அனுப்பி வைக்க முடியும். தனியார் பார்சல் சேவை கட்டணத்தை விட, தபால்துறை கட்டணம் குறைவு. வணிகரீதியிலான பார்சல்கள் அனுப்ப விருப்பம் உள்ளவர்கள், வேலூர் தலைமை தபால்நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்' என்றார்.

சுண்டெலி செத்து கிடந்த விவகாரம்

3 லட்சம் ஜூஸ் பாக்கெட்டுகள் விற்பனை செய்ய அதிரடி தடை

தனியார் நிறுவனத்துக்கு உத்தரவு

▶ கே.வி.குப்பத்தில் சிறுவன் குடித்த ஜூஸ்பாக்கெட்டில் சுண்டெலி செத்து கிடந்த எதிரொலியாக, உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட அலுவலர் செந்தில்குமார், உணவு பாதுகாப்பு அலுவலர் ராஜேஷ் ஆகியோர் கடைகளில் ஆய்வு செய்தனர்.

வேலூர், ஆக. 9: கே.வி.குப்பத்தில் உள்ள ஜூஸ் பாக்கெட்டில் சுண்டெலி செத்து கிடந்த சம்பவம் எதிரொலியாக ஆய்வு செய்த உணவு பாதுகாப்புத்துறையினர் 3 லட்சம் பாக்கெட்டுகளை விற்பனை செய்யக் கூடாது என்று தனியார் நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளனர்.

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் அடுத்த பி.கே.புரம் பகுதியை சேர்ந்த சீனிவாசன், நதியா தம்பதியினர் காட்பாடி - குடியாத்தம் தேசிய நெடுஞ்சாலையில் ஓட்டல் நடத்தி வருகின்றனர். இவர்களது 13 வயது மகளும், 4 வயது மகனும் கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஓட்டல் எதிரே உள்ள பெட்டிக்கடையில் ₹10 மதிப்பிலான மாம்பழம் ஜூஸ் வாங்கினர்.

பின்னர் வீட்டிற்கு சென்று சிறுவன் குடிக்க முயன்றபோது, பைப்பில் ஏதோ சிக்கி உள்ளது. மேலும் ஜூஸ் கசப்பாக இருந்துள்ளது. இதனால் பெற்றோர் ஜூஸ் பாக்கெட்டை பிரித்து பார்த்த போது சுண்டெலி செத்து கிடந்தது. இதனால் அதிர்ச்சியடைந்தவர்கள் செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வைரலாக்கினர்.

இந்நிலையில் மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை அலுவலர் செந்தில்குமார், உணவு பாதுகாப்பு அலுவலர் ராஜேஷ் ஆகியோர் கொண்ட குழுவினர், கே.வி.குப்பத்திற்கு சென்று சிறுவனின் வீட்டில் விசாரித்துள்ளனர். அப்போது சுண்டெலி செத்து கிடந்த ஜூஸ் பாக்கெட்டை கேட்டதற்கு தூக்கிப்போட்டுவிட்டோம் என கூறியுள்ளனர். தொடர்ந்து எதிரே உள்ள கடைக்கு சென்று ஆய்வு செய்துள்ளனர். அப்போது மாம்பழ ஜூஸ் கொண்ட பேட்ஜ் எண் வைத்து, சம்மந்தப்பட்ட தனியார் நிறுவனத்துக்கு தொடர்பு கொண்டு, அந்த பேட்ஜ் எண் கொண்ட 3 லட்சம் ஜூஸ் பாக்கெட்டுகளை விற்பனை செய்யக்கூடாது. உடனடியாக மாதிரி எடுத்து அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டனர். தொடர்ந்து மாவட்டம் முழுவதும் ஆய்வு செய்யப்படும் என்று உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

muthoot PAPPACHAN HOUSING FINANCE

முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்

பதிவு அலுவலகம்: டி.சி. எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம் - 695 034, CIN எண்-U65922KL2010PLC025624. கார்ப்பரேட் அலுவலகம்: 12/A 01, 13வது தளம், பரினீ கிரெஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051 தொலைபேசி எண்: 022-62728517, அதிகாரப்பூர்வ அதிகாரி மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com, தொடர்பு நபர்: கிரண்குமார். J, ஜெயசுந்தரம் -9841292990

பொது அறிவிப்பு – சொத்து ஏலம் மற்றும் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இல் அடங்கிய தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் (இனிமேல் "நிறுவனம்" ஆக குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரி கீழேக் குறிப்பிட்டச் சொத்துகள் (இனிமேல் "கடனீட்டுச் சொத்து" ஆக குறிப்பிடப்படும்) மேலும் கீழ்க்குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு (இனிமேல் "கடன்தாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்) வழங்கிய வீட்டுக் கடன் வசதிகளுக்கான கடனீடாக வைத்திருப்பதை சுவாதீனம் செய்துள்ளார் மேற்கொண்டு கடன்தாரர்கள் மூலமான மிகைபாக்கியின் இறுதி பணப்பட்டுவாடா வரையான அதற்குரிய மேற்கொண்டு வட்டி மற்றும் செலவுகளுடன் கீழ்க்காணும் தொகைக்குரிய கடனீட்டுக் கடன் தொகை நிமித்தம் பொதுமக்களிமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்பதன் மூலம் "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா" அடிப்படை/நிபந்தனைகளில் கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர்/கள் பெயர் & க.க.எ.	சொத்து விவரம்	சுவாதீனம் வகை & நாள்	மொத்த நிலுவைத்தொகை (₹) பொருந்தும் எதிர்கால வட்டி	நிர்ணய விலை (₹)	முன்வைப்புத் தொகை (₹)
1	க.க.எ. எண்: 11111079123 சாமுண்டீஸ்வரி ரமேஷ் ரமேஷ் தியாகராஜன்	எண்.72, சர்வே எண் 272/1, அன்வெத்திகானபெட், காவேரிப்பாக்கம், அரக்கோணம், வேலூர் மாவட்டம், தமிழ்நாடு, வேலூர், 632502 இந்தியா	ஆக்கப்பூர்வ சுவாதீனம்-09-மார்ச்-2022	07-ஆகஸ்டு-2023 தேதியன்று ₹5,08,563.00/-	₹15,41,000/-	₹1,54,100/-
2	க.க.எ.எண்: 11220102104 சந்திரன் P கஸ்தூரி C சுரேஷ் குமார் C	அனைத்து துண்டு மற்றும் பகுதி நிலம் மற்றும் கட்டிடம் 1800 பரப்பளவுள்ள உள்ளடக்கிய சர்வே எண். 21/3, டவுன் சர்வே பிரிக்கப்பட்ட வார்டு-D, பிளாக்-4, டவுன் சர்வே எண்.40, தினகரா நகர் என்று பெயரிடப்பட்ட மனைப்பிரிவு, ராணியம்மாள் தெரு, வின்டர்பெட், அம்மனூர் மதுரா, அரக்கோணம் டவுன் மற்றும் பஞ்சாயத்து வேலூர் மாவட்டம், அரக்கோணம் பதிவு மாவட்டம் மற்றும் அரக்கோணம் சார்பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்டது. இணைந்த 1 எல்லைகளான கிழக்கு: வழக்கறிஞர் சிவபாதம் மனை, மேற்கு: 20 அடி சாலை, வடக்கு: ஜெயராமன் என்பவருக்கு சொந்தமான மனை, தெற்கு: ரவி என்பவருக்கு சொந்தமான மனை. அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்-60அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்-60அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்-30அடி	ஆக்கப்பூர்வ சுவாதீனம்-26-அக்டோபர் -2022	07-ஆகஸ்டு -2023 தேதியன்று ₹12,23,889/-	₹32,00,000/-	₹3,20,000/-
3	க.க.எ.எண்: 11114089749 கதிர்வேல் ஸ்ரீநிவாசன் மகேஸ்வரி (எ) மகேஸ்வரி கதிர்வேல்	அனைத்து துண்டு மற்றும் பகுதி நிலம் மற்றும் 950 சதுரஅடி (88.26 சதுர மீட்டர்) பரப்பளவுள்ள கட்டிடம், உள்ளடக்கிய சர்வே எண்.96, புதிய எண். 138/30 வேலூர் மாவட்டம், ஆம்பூர் சார்பதிவு மாவட்டம், ஆம்பூர் தாலுகா, வெங்கிலி கிராமம், மற்றும் அதன் எல்லைகளான: வடக்கு: பழனி என்பவருக்கு சொந்தமான வீடு, தெற்கு: தெரு, கிழக்கு: ரவிசங்கர் என்பருக்கு சொந்தமான மனை, மேற்கு: லோகு முதலியார் என்பவருக்கு சொந்தமான 950 சதுரஅடி பரப்பளவுள்ள நிலம், கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 19அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 19அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 50அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பகுதி: 50அடி, மற்றும் வேலூர் பதிவு மாவட்டம், ஆம்பூர் சார்பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்டது.	ஆக்கப்பூர்வ சுவாதீனம்-26-19-நவம்பர் -2022	07-ஆகஸ்டு-2023 தேதியன்று ₹5,82,724.00/-	₹7,36,000/-	₹73,600/-

பார்வையிடும் நாள் & நேரம்: 24-ஆகஸ்டு 2023 & 25-ஆகஸ்டு-2023 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
ஏலத் தேதி: 12-செப்டம்பர்-2023 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை & ஏலப்புள்ளி சமர்ப்பிக்கக் கடைசி நாள்: 11-செப்டம்பர்-2023
விற்பனை இடம்-சென்னை கிளை: 138, 2வது தளம், அமீன் மனார், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை, தமிழ்நாடு-600 034.

திட்டமிடும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சொத்துகளை பார்வையிடலாம். பொது ஏலம் விதிமுறைகள் & நிபந்தனைகள்:-

1) விற்பனையானது கண்டிப்பாக பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் வழிகாட்டுதல் நடைமுறையின்படி இதன்கீழ் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் & திட்டமிடும் ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. 2) சொத்து "உள்ளது உள்ளவிடத்தில்" மற்றும் "உள்ளது உள்ளவாறு" "உள்ளது எதுவோ அது" மேலும் "உதவிசாரா" நிபந்தனையில், வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவை உட்பட விற்பனை செய்யப்படும். 3) ஏலத்திலான சொத்துகளை மேலே குறிப்பிட்ட நாள் & நேரத்தில் பார்வையிடலாம். சொத்துகளை பார்வையிடுதல் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து விசாரணைகளுக்கு, மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்களில் சம்பந்தப்பட்ட இடங்களிலான அதிகாரப்பூர்வ அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். ஆர்வமுள்ள வாங்குவோர் நிர்ணய விலையின் 10% முன்வைப்புத்தொகைக்காக (EMD), "முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்" பெயரில் மும்பையில் மாற்றத்தக்க கேட்பு வரைவோலையுடன் ஒரு முத்திரையிட்ட உறையில் மேற்கூறிய சொத்துக்கான அவர்தம் ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்பலாம். 4) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுடன், திட்டமிடும் ஏலதாரர் வருமானவரித் துறையால் வழங்கப்பட்ட பான் அட்டை மற்றும் ஏலதாரரின் அடையாளச் சான்று மேலும் இருப்பிடச் சான்றின் நகல்பிரதி அதாவது கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுநர் உரிமம், ஏனையவை போன்றவற்றின் நகல் ஒன்றையும் இணைக்க வேண்டும். 5) சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்பட சாத்தியமில்லை. 6) ஏலத்தில் ஆஜராகும் ஏலதாரர்கள் நிர்ணயித்த நிர்ணய விலைக்கு கூடுதலாக ₹10000/- மடங்கில் அவர்தம் ஒப்பந்தப்புள்ளியை உயர்த்த அனுமதிக்கப்படுவர். 7) அனைத்து நிலுவைகள் மற்றும் செலவுகள், அதாவது நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கம் கட்டணங்கள், மின்சாரம் மற்றும் குடிநீர் வரிகள் அல்லது ஏதேனும் பிற நிலுவைகள் முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர்மாற்றம் கட்டணங்கள் உள்ளிட்டவை மேலும் அனைத்து பிற செலவுகள் மற்றும் மேற்கூறிய சொத்துகள் தொடர்பான விற்பனை சான்றிதழ் பதிவுக்கான கட்டணங்கள் அனைத்தும் வெற்றிகர ஏலதாரர்/ கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 8) வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளர் விற்பனை தொடர்பாக அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதிலிருந்து அடுத்த வேலை நாளுக்குள் இறுதி ஏலத் தொகையின் 25% (ஏற்கனவே செலுத்திய 10% முன்வைப்புத்தொகை சரிகட்டலுக்கு பிந்தையது) தொகையை செலுத்த வேண்டும், தவறினால், முன்வைப்புத்தொகை கைக்கொள்ளப்படும். 9) விற்பனை விலையின் மீதி 75% ஆனது அதிகாரப்பூர்வ அதிகாரியால் வெற்றிகர கொள்முதலாளருக்கு விற்பனை ஒப்புதல் தெரிவிக்கப்பட்டதன் 15 நாட்களுக்குள் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியால் மேலும் தனி விருப்ப உரிமையில் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்ட இவ்வித நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். 10) அதிகாரப்பூர்வ அதிகாரி அவருடைய விருப்ப உரிமையில், முன்னறிவிப்புமின்றி, விற்பனைக்கான இந்த அறிவிப்பின் ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற உரிமை கொண்டிருக்கிறார். 11) ஒருவேளை, கடனீட்டு கடனீந்தோருக்கு ஏற்பட்ட அனைத்து செலவு, கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து அனைத்து நிலுவைகளும் மேற்கூறிய பெயரிலான கடன்தாரர் / உப-கடன்தாரர் மூலம் ஏலத் தேதிக்கு ஒரு வேலை நாள் முன்பு வரைக்குள்ளாக செலுத்தப்பட்டு விட்டால் பிறகு சொத்து விற்பனை செய்யப்படாது மேலும் எதிர்நோக்கும் ஏலதாரர்களிமிருந்து பெறப்பட்ட அனைத்து ஏலப்புள்ளிகளும் M/S. முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்கு எதிராக ஏதேனும் பொறுப்பு / கோருரிமையின்றி அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/ அடமானதாரர் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து மேற்குறிப்பிட்ட தேதிகளுக்குள் நாளது தேதி வரையான வட்டி மற்றும் செலவினங்களுடன் மேற்குறிப்பிட்டவாறு கடன்பொறுப்பை முழுமையாக தீர்க்குமாறு மேலும் நிலுவைகளை செலுத்துமாறு பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) & 9 கீழ் சட்டப்பூர்வ 15 நாட்கள் அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுகிறது தவறினால் கடனீட்டுச் சொத்து மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை செய்யப்படும். **கடன்தாரர்/கள் 30 நாட்கள காலத்திற்குள் சொத்து இடத்திலிருந்து அவர்தம் உரிமையளிக்கப்படாதப் பொருட்களை அகற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் இல்லையெனில் அது அவர்தம் பொறுப்பு மற்றும் செலவில் சொத்து இடத்திலிருந்து அகற்றப்படும்.**

இடம் : தமிழ்நாடு, நாள் : 09 ஆகஸ்ட் 2023

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்காக